**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

S.C. Case No : 13/2021

Deposition of witness for Prosecution : Pw3

Defence :

Name : Arokia raj
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 27.10.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை :

நான் சின்ன எலசகிரியில் குடியிருக்கிறேன். நான் தற்பொழுது இகோ என்ற கம்பெனியில் வேலை பார்க்கிறேன்.இதற்கு முன்பு ஜேஎம்ஜே கம்பெனியில் காமராஜ் நகர் ஓசூரில் வேலை பார்த்தேன். அ.சா.1 ஐயும் ஆஜர் எதிரியையும் எனக்குத் தெரியம். 28.12.2012 இரவு 11 மணிக்கு எதிரி எங்கள் கம்பெனிக்கு லோடு எடுத்துக்கொண்டு வந்தார். நாங்கள் பொருட்களை எண்ணிக்கொண்டிருந்தோம். நான் பொருட்களை எடுத்து சென்றுவிட்டேன்.அப்பொழுது சரவணனும் எதிரியும் பேசிக்கொண்டிருந்தார்கள். முதலில் எதிரி எங்கள் கம்பெனிக்கு வந்து விட்டு சென்றுவிட்டார். திரும்பவும் அவர் கம்பெனிக்கு வந்தார்.அப்பொழுது அ.சா.1 சொன்னதால் பொருட்களை இறக்கிக்கொண்டிருந்தோம். பொருட்களை நாங்கள் இறக்கி வைத்து விட்டோம். நாங்கள் வண்டியின் கதவை சாத்த்பார்த்துக்கொண்டிருந்தோம்.அப்பொழுது எதிரி வண்டியில் இருந்து அரிவாள் எடுத்து வந்து சரவணணிண் இடது கழுத்தில் வெட்டிவிட்டார். அப்பொழுது சுமார் 12 மணி இருக்கும். சரவணனுக்கு கழுத்தில் இருந்து இரத்தம் வந்தது. உடனே இஎஸ்ஐ மருத்துவமனைக்கு ஓசூருக்கு சரவணனை அழைத்து சென்றோம். அதன் பிறகு அங்கிருந்து அரசு மருத்துவனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். காரில் லிப்ட் கேட்டு நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம். அதன் பின்பு ஓசூர் அரசு மருத்துவமனையில் இருந்து

செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்க அ.சா.1 சிகிச்சைக்கு சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை:

ஜேஎம்ஜே கம்பெனியில் நான் 7ஆண்டுகள் வேலை பார்த்தேன். எனக்கு எதிரியை சம்பவத்திற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு தெரியும். சம்பவத்திற்கு முன்பு வரை எதிரிக்கும் எங்கள் அலுவலக ஊழியர்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. பொதுவாக எங்கள்கம்பெனிக்கு வண்டியில் பொருட்களை எடுத்து வருவார்கள். இறக்கி வைத்து விட்டு வண்டி சென்றுவிடும். ஓட்டுநரின் வேலை கம்பெனியில் இருந்து பொருள் எடுத்து வந்து இறக்கி வைத்து விட்டு சென்று விடுவது. பொருட்களை அனுப்பும் போதே அதை எடை போட்டு அனுப்பி வைப்பார்கள் என்று சொன்னால் சரிதான். வரும்போது பொருட்களை எண்ணி இறக்குவோம். பொருட்கள் பாக்ஸ்களில் அடைக்கப்பட்டு வரும்.அவற்றை எண்ணி இறக்குவோம். எங்கள் கம்பெனியில் பகல் நேரங்களில மட்டும் ஒரு வாட்ச்மேன் வேலை பார்ப்பார்.இரவு நேரத்தில் வாட்ச்மேன் யாரும் இல்லை. எங்கள் கம்பெனிக்கு எந்த வாகனம் வந்தாலும் சென்றாலும் ட்ரிப்சீட்டில் எழுதி கையெழுத்துப்போட்டு கொடுப்போம் என்று சொன்னால் சரிதான். எதிரியும் அ.சா.1ம் நாங்கள் லோடு இறக்கி கொண்டிருந்த போது லாரிக்கு பக்கவாட்டில் பேசி கொண்டிருந்தார்கள். அதன் பின்பு சத்தம் கேட்டு நாங்கள் ஓடி போய் பார்த்தோம் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடைபெற்ற போது நான் சதீஷ்,பூபாலன் ஆகியோர் இருந்தோம்.சம்பவத்தின் போது வடமாநிலத்தார் எங்கள் கம்பெனயில் வேலை பார்த்தார்கள் என்று சொன்னால் சரிதான். அவர்கள் சம்பவத்தின் போதுஇருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.அவர்கள் வேலை பார்ததுக்கொண்டிருந்தார்கள். நாங்கள் மட்டும் தான் லோடு ஏற்றினோம். வண்டி நின்றிருந்த இடதர்திற்கும் ஆட்கள் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கும் சுமார் 30 அடிதூரம் இருக்கும். சம்பவத்தன்று இரவு நேரத்தில் 24 பேர் வேலை பார்த்தார்கள். நான் சத்தம்கேட்டு போய் பார்த்த போது அ.சா.1 எதிரியை அடித்துக்கொண்டிருந்தார் என்ற சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்து முடிந்த பின்பு போலிசார் சம்பவத்தை பார்த்து விட்டு வண்டியை காவல் நிலையத்திற்கு எடுத்துசென்று விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி அ.சா.1 ஐ தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வெட்டினார்.அ.சா.1 சொன்னதால் நானும், பூபாலன், ஜான் மற்றும் 2 வடமாநிலத்தவர்கள் சேர்ந்து எதிரியை தாக்கினோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எடுத்து வந்த லாரியை நாங்கள் அடித்து நொறுக்கினோம் என்று சொன்னால் சரியல்ல. அடி பொறுக்க முடியாமல் எதிரி எங்கள் கம்பெனியில் இருந்து ஓடினார் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் நான் இருந்திருந்தால் சம்பவத்தை தடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரி வண்டியை எடுப்பார் என்று பார்த்தேன். ஆனார் அரவாளை எடுத்து உடனே வெட்டிவிட்டார். இரும்பு கேபிளை எடுத்து எதிரியை தாக்கியதில் எதிரிக்கு காயம் ஏற்பட்டது என்றும் அதே கேபிலினால் தான் அ.சா.1க்கும் காயம் எற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 எனது சூப்பரைசர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.